[2004 நவம்பர் 22

(இ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003—2005 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் தொண்ணூறாவது அறிக்கையினை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

4. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் திருக்கோயிலில் கொலையுண்ட மேலாளர் திரு. சங்கரராமன் குடும்பத்திற்கு நிதியுதவி குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 110-ன்கீழ் இரண்டு அறிக்கைகளை வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி கேட்டிருக்கிறார்கள். அனுமதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் திருக்கோயிலில் மேலாளராகப் பணியாற்றிய திரு. சங்கரராமன் என்பவர், 3-9-2004 அன்று, அத்திருக்கோயிலின் உள்ளே உள்ள அவரது அலுவலகத்தில், பட்டப் பகலில் படுகொலை செய்யப்பட்டார் என்பதையும், அது தொடர்பாக தமிழ்நாடு காவல் துறை தீவிர விசாரணை மேற்கொண்டு வருவதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள்.

சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்த வேண்டி, உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வேறுபாடின்றி, சட்டத்தின்முன் அனைவரும் சமம் என்ற கொள்கையின் அடிப்படையில், தக்க நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு மேற்கொண்டுள்ளது என்பதை இந்த மாமன்றம் நன்கு அறியும்.

இந்த நிலையில், திரு. சங்கரராமன் அவர்களின் துணைவியார் திருமதி பத்மா தன்னுடைய கணவர் திரு. சங்கரராமன் அநியாயமான முறையில் படுகொலை செய்யப்பட்டார் என்றும், தனது கணவர் பெற்று வந்த சம்பளத்தின் மூலமே குடும்பத் தேவைகள் கவனிக்கப்பட்டு வந்தன என்றும் தெரிவித்துள்ளார். மேலும் திரு. சங்கரராமன் கொலை